**செ.வெ.எண்.391/2017** **நாள்:09.08.2017**

**காஞ்சிபுரம் வட்டம், திருப்புட்குழி குறுவட்டம், வதியூர் கிராமத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் ரூ.14.36 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் வட்டம், திருப்புட்குழி குறுவட்டம், வதியூர் கிராமத்தில் கூரம், தைப்பாக்கம், மேல்பங்காரம், உழக்கோல்பட்டு ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கிய மனுநீதி நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் கலந்து கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் பல்வேறு துறைகளின் சார்பாக வைக்கப்பட்டிருந்த திட்ட விளக்க அரங்குகளை பார்வையிட்டார். பல்வேறு துறை அலுவலர்கள் அவரவர் துறையின் செயல்படுத்தபடும் நலத்திட்டங்கள் குறித்து விளக்கினர்.

தொடர்ந்து, வருவாய்த்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.2.59 லட்சம் மதிப்பிலான வீட்டுமனைப்பட்டாக்களும், 2 பயனாளிகளுக்கு ரூ.2.56 லட்சம் மதிப்பிலான பசுமை வீடுகளும், 25 பயனாளிகளுக்கு பட்டா மாற்றமும் (முழு புலம் மற்றும் உட்பிரிவு புலம்), சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் விதவை உதவித்தொகை, இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொதை, ஆதரவற்ற விதவை உதவித்தொகை, முதிற்கன்னி உதவித்தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு உதவித்தொகை மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் உதவித்தொகை என 30 பயனாளிகளுக்கு வருடத்திற்கு ரூ.3.60 லட்சம் மதிப்பிலான உதவித் தொகைகளுக்கான ஆணையையும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 12 பயனாளிகளுக்கு ரூ.1.69 லட்சம் மதிப்பிலான காசோலைகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.9120 மதிப்பிலான காசோலையும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பிலான காசோலையும், 15 பயனாளிகளுக்கு சிறு விவசாயி சான்றுகளும், 37 பயனாளிகளுக்கு மின்னணு (Smart Card) குடும்ப அட்டைகளும், வேளாண் துறையின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.56 ஆயிரத்து 451 மதிப்பிலான வேளாண் இடுபொருட்களும், தோட்டக்கலைத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.26 ஆயிரம் மதிப்பிலான இடுபொருட்களையும், சமூக நலத்துறையின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.2.50 லட்சம் மதிப்பிலான காசோலைகளையும், 18 பழங்குடியினர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டையும், 72 இருளர் இனத்தவர்களுக்கு இருளரின சான்றும், ஆக மொத்தம் 243 பயனாளிகளுக்கு 14.36 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் வழங்கி பேசியதாவது,

ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அதிக தூரத்தில் உள்ள கிராம மக்கள் அரசின் திட்டங்களை அறிந்து கொண்டு, பயன்பெறும் வகையிலும், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று, அதற்கான சரியான தீர்வெடுத்து, பொதுமக்களுக்கு உரிய பயன் சென்றடையும் வகையிலும் இதுபோன்ற மனுநீதி முகாம்கள் நடத்தப்படுகின்றன. இம்முகாம்களில் பல்வேறு துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து மக்கள் அறியும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் துறைகள் வாரியாக அந்தந்த அலுவலர்கள் அவரவர் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் விளக்க பேசியுள்ளனர்.

இத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ள இம்முகாம் ஒரு நல்லவாக அமைந்துள்ளது. மனுநீதி நாள் முகாம் நடைபெறுவதற்கு முன்பாகவே பொது மக்களிடம் மனுக்கள் பெறப்படுகின்றன. கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, பொதுமக்கள் கோரிக்கை மனுக்கள் பெறப்படுகின்றன. இந்த மனுநீதி நாள் முகாம் நடைபெறும் இடத்தில் 15 நாட்கள் முன்பாக அரசு அலுவலர்கள் நேரில் சென்று 73 மனுக்கள் பெற்று, அதில் 54 மனுக்கள் உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மனுநீதி நாள் முகாம் மட்டுமின்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மற்ற நேரங்களில் பொதுமக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீதும் உடனடி தீர்வு காணப்படும் என தெரிவித்தார். பின்னர் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் சுகாதார விழிப்புணர்வு ரதத்தினை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எழிலரசன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயகுமார், வருவாய் கோட்டாட்சியர் திரு.பன்னீர் செல்வம், தனிதுணை ஆட்சியர் திரு.சக்திவேல், தனி துணை ஆட்சியர்கள் திரு.முரளி, ஆதிதிராவிட நலத்துறை அலுவலர் திருமதி.தமிழ்ச்செல்வி, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு.பின்டன் மிஷியர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.கு.லதா பானுமதி, வட்டாட்சியர் திரு.நாகராஜன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.